மைய அரசாங்கத்திடம் அனுமதிபெற அரசின் சார்பில் மீண்டும் முயற்சிகள் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முயற்சி செய்வீர்களா எனக் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 87, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

87—

மீன் பிடிக்கும் உரிமம் வழங்குதல்

*1098—**திரு. ஜி.கே. மணி :**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதியிலுள்ள மீன் பிடிக்கும் தொழில் செய்பவர்களுக்கு மேட்டூர் நீர்த் தேக்கத்தில் மீன் பிடிக்கும் உரிமம் நடப்பு ஆண்டில் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடப்பு ஆண்டில் புதியதாக மீன்பிடிக்கும் உரிமம் வழங்கப்படவில்லை. எனினும் இப்பகுதி மீனவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப் பெற்றால், அதனை ஆய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உரிமம் வழங்க வேண்டுமெனில் அவர்கள் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கத்திலே கிடைக்கக்கூடிய மீனானது, சுவை மிகுந்த மீன். எல்லோரும் விரும்பிச் சாப்பிடக்கூடிய மீன். அதிலும் குறிப்பாக,

1996 ஆகஸ்டு *5*]

கல்கத்தா மார்க்கெட்டிலே, மேட்டூர் மீன் என்று சொன்னாலே, விரும்பி வாங்கக்கூடிய நிலை. அப்படி அதிக அளவில் உற்பத்தியான மீன், இன்றைக்கு மேட்டூரிலேகூட கிடைக்காத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக, ஆந்திர மாநிலத்தில் இருந்து மேட்டூர், சேலம், தர்மபுரி போன்ற பகுதிகளுக்கு மீன்கள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மேட்டூர் நீர்த்தேக்கத்தின் கரையிலே இருக்கக்கூடிய என்னுடைய பெண்ணாகரம் தொகுதியைச் சேர்ந்த மக்களில், மேற்குக் கரையோரத்தில் இருக்கக்கூடிய மேட்டூர் தொகுதியைச் சேர்ந்த மக்களில், மீன் பிடித்து வாழ்பவர்கள் அதிகம் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மீன் பிடிக்கும் உரிமம் கேட்டு விண்ணப்பிக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு உரிமம் கிடைப்பதில்லை. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேரவேண்டுமென்று சொன்னார்கள். அங்கே உறுப்பினராகச் சேருவதற்கு விண்ணப்பித்தால், அது நிராகரிக்கப்படுகிறது. எனவே, மீண்டும் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்கள் அதிகமாகச் சேர்க்கப்படுவார்களா, சேர்க்கப்பட்டவுடன் உரிமம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் சுவை மிக்கது என்பது அனைவருக்கும் தெரியும். அவர்கள் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். மேலும் அந்தப் பகுதியிலுள்ள மீனவராகவும் இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்டவர்களாக இருந்தால் நிச்சயம் அவர்களுடைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் *77*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.